# திருத்தங்கல் நகராட்சி

## சாதாரண கூட்டம்

நிகழும் ஸ்ரீவிளம்பி வருடம் ஆவணி திங்கள் ம் நாள் **31–07–2019** ம் தேதி திங்கட்கிழமை காலை **11.00** மணியளவில் நகராட்சி அலுவலகத்தில் வைத்து சாதாரண கூட்டம் நடைபெறும்.

**முன்னிலை : திரு.மா. சுவாமிநாதன்**

திருத்தங்கல் நகராட்சி
நாள் .26 –07–2019

தனிஅலுவலர்
திருத்தங்கல் நகராட்சி

**பொருள்–325**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு துப்புரவு பணிக்கு தேவையான கிருமி நாசினி பொருட்கள் சப்ளை செய்ய 27/08/2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளன.

| வ.எண் | பொருட்களின் விபரம் | விருதரசி கெமிக்கல் சிவகாசி | வான்முகில் மகளிர் சுயஉதவிக் குழு சிவகாசி |
|---|---|---|---|
| 1 | சுண்ணாம்பு தூள் | 7.50/kg | 8.00/kg |
| 2 | பிளிச்சிங் பவுடர் (கிரேடு —— 1) | 38/kg | 40/kg |
| 3 | பிளிச்சிங் பவுடர் (கிரேடு —— 2) | 34/kg | 36/kg |
| 4 | பினாயில் | 52/kg | 54/kg |
| 5 | ஆசிட் | 36/lit | 38/lit |
| 6 | பிளிச்சிங் ஆயில் | 68/lit | 70/lit |

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த விருதரசி கெமிக்கல், சிவகாசி என்ற நிறுவனம் மூலம் மார்ச் 2020 வரை வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

1. பொது சுகாதர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் : 1099/2019/41

**பொருள்–326**

திருத்தங்கல் நகராட்சி ஒருங்கிணைந்த குழந்தைகள் மேம்பாட்டு நிதி 2019-2020 திட்டத்தின் கீழ் 03.07.2019-ம் தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br><br>திருத்தங்கல் நகராட்சிக்கு உட்பட்ட அக்ரஹாரம், முத்துமாரியம்மன் காலனி, பாண்டியன் நகர், பெரியார் காலனி மற்றும் சிறுவர் பூங்கா அங்கன் வாடி மையங்களுக்கு குடிநீர் வசதிகள் மேற்கொள்ளும் பணி (5 மையங்கள்) | 1.40 | P.முருகன் | 0.41% குறைவு |
| | | | M.கண்ணன | 0.87% கூடுதல் |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.41% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் **P.முருகன்** அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>அலுவலகக்குறிப்பு</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண் : 339/இ1/2019)

**பொருள்–327**

திருத்தங்கல் நகராட்சி வறட்சி நிவாரண நிதி திட்டம் 2019-20 ( Drought Schme) திட்டத்தின் கீழ் 03.07.2019-ம் தேதி அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1 | திருத்தங்கல் நகராட்சியில் பல்வேறு இடங்களில் ஆழ்துளை கிணறு அமைத்து மின்விசை பம்புகள் பொருத்தும் பணி 10 எண்ணம் (சிப்பம் - I) | 40.00 | K.கிருஷ்ணசாமி | 0.12% குறைவு |
| | | | P.முருகன் | 0.05% கூடுதல் |
| 2 | திருத்தங்கல் நகராட்சி பல்வேறு பகுதிகளில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்து ஆழப்படுத்தும் பணி 50 எண்ணம் (சிப்பம் - II) | 50.00 | K.கிருஷ்ணசாமி | 0.31% குறைவு |
| | | | P.முருகன் | 0.10% கூடுதல் |
| 3 | திருத்தங்கல் நகராட்சி பல்வேறு பகுதிகளில் ஏற்கனவே உள்ள ஆழ்துளை கிணறுகளை சுத்தம் செய்து ஆழப்படுத்தும் பணி 50 எண்ணம் (சிப்பம் - II) | 30.00 | K.கிருஷ்ணசாமி | 0.11% குறைவு |
| | | | P.முருகன் | 0.07% கூடுதல் |

| | | | | |
|---|---|---|---|---|
| 4 | திருத்தங்கல் நகராட்சி பல்வேறு இடங்களில் 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட HDPE Tank அமைக்கும் பணி 50 எண்ணம் -(சிப்பம் - IV) | 4.50 | K.கிருஷ்ணசாமி | 0.06% குறைவு |
| | | | P.முருகன் | 0.10% கூடுதல் |
| 5 | திருத்தங்கல் நகராட்சி பல்வேறு பகுதிகளில் பழுதடைந்த மின்விசை பம்புகள் மற்றும் ஆழ்துளை கிணற்றுக்குரிய பொருள்கள் சப்ளை செய்யும் பணி (ரூ.37.50 இலட்சம்) | 37.50 | K.கிருஷ்ணசாமி | 0.12% குறைவு |
| | | | P.முருகன் | 0.04% கூடுதல் |

மேற்காண் அட்டவணை வரிசை எண்.1-ல் உள்ள பணிக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.12% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.கிருஷ்ணசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி , வரிசை எண். 2-ல் உள்ள பணிக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.31% குறைவு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.கிருஷ்ணசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி, வரிசை எண். 3-ல் உள்ள பணிக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.11% குறைவு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.கிருஷ்ணசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி, வரிசை எண். 4-ல் உள்ள பணிக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.06% குறைவு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.கிருஷ்ணசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி, வரிசை எண்.5-ல் உள்ள பணிக்கு மதிப்பீட்டுத் தொகையினை விட 0.12% குறைவு ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் திரு.கே.கிருஷ்ணசாமி அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 1354/இ1/2019

**பொருள்–328**

திருத்தங்கல் நகராட்சி பருவமழை பொய்த்ததின் காரணமாக நீர்த்தேக்கத்தில் நீர் இருப்பு குறைவாக இருப்பதால், பொதுமக்கள் குடிநீரினை சிக்கனமாக பயன்படுத்துமாறும், குடிநீரினை காய்ச்சி வடிகட்டி குடிக்க வேண்டியும், குடிநீர் இணைப்புகளில் மின் மோட்டார் மூலம் குடிநீர் எடுப்பது சட்ட விரோதமானது என்றும், குடிநீர் இணைப்பு துண்டிப்பு செய்யப்படும் என்பது தொடர்பான அறிவிப்பினை வெளியிட்ட தினத்தந்தி நாளிதழ் நிறுவனத்திற்கு ரூ.6615/- ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**
மன்றம் அனுமதிக்கலாம்
ந.க.எண். 1831/2019/இ2

**பொருள்–329**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு வாகனம் TN67 L 3267 மினி லாரிக்கு 16/09/2019 உடன் தகுதிச் சான்றிதழ் முடிவடைய உள்ளதால் மேற்படி வாகனத்திற்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொண்டு தகுதிச் சான்றிதழ் பெற ஆகும் உத்தேச செலவின தொகை ரூ.70000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொது சுகாதர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்

ந.க.எண் : 1247/2019/H1

**பொருள்–330**

இந்நகராட்சிக்கு எதிராக தொடரப்படும் வழக்குகளுக்கு, நகராட்சி சார்பாக வக்காலத்து மற்றும் எதிர்வாதுரை தாக்கல் செய்து வாதிட திரு.என்.திலிப்குமார், பி.ஏ.,பி.எல்., வழக்கறிஞர் அவர்களை நகர் மன்ற வழக்கறிஞராக நியமித்துக்கொள்ள நகர்மன்றதிதின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு:-**

அனுமதி வழங்கலாம்

ந.க.எண். 1424/2019/சி1

**பொருள்–331**

இந்நகராட்சியில் உள்ள 15 கணிணிகள் மற்றும் 13 பிரிண்டர்கள் ஆகியவைகளுக்கு வருடாந்திர **(2019–20)** பராமரிப்பு மேற்கொள்ள **15.07.2019** அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற விலைப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவுக்கும் வைக்கப்படுகிறுது.

அலுவலகக்குறிப்பு–

1. மேற்கண்ட விலைப்புள்ளிகளில் ஸ்டார் சிஸ்டம் சிவகாசி கொடுத்துள்ள விலைப்புள்ளி குறைவாக இருப்பதால் அதனை வழங்கலாம்.
2. செலவினம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண்.1763/2019/சி3)

**பொருள்–332**

திருத்தங்கல் நகராட்சியில் கடும் வறட்சி காரணமாக குடிநீர் கிடைக்கவில்லை என பொதுமக்கள் போராட்டம் நடத்தி வருகின்றனர். மேலும் **01.04.2018** முதல் **50%** வரி உயர்த்தப்பட்டு வசூல் செய்யப்படுகிறது. மேலும் தற்பொழுது குடிநீர் துணை விதிகளின் படி குடிநீர் கட்டணங்கள் சதுர அடி அடிப்படையில் உள்ளதால் கட்டணம் மற்றும் வைப்புத்தொகைகள் அதிகமாக உள்ளது என பொதுமக்கள் மற்றும் முன்னாள் நகர்மன்ற உறுப்பினர்கள் என பலரும் கடும் எதிர்ப்பு தெரிவித்து வருகின்றனர். மேலும் சாலை மறியல் செய்வோம் என ஆர்ப்பாட்டம் செய்து வருகின்றனர். தற்பொழுது கடும் வறட்சி நிலவி வருவதால் குடிநீர் வரத்து மிகவும் குறைவாகவே தமிழ்நாடு குடிநீர்வடிகால் வாரியத்திடமிருந்து பெறப்படுகிறது. ஆகையால் பொதுமக்களுக்கு தினசரி போதுமான அளவில் குடிநீர் வழங்க இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் **01.04.2019** முதல் குடிநீர் துணை விதிகளை செயல்படுத்த புதிய குடிநீர் இணைப்பு வைப்புத்தொகை மற்றும் குடிநீர் கட்டணம் வசூல் செய்ய ஆணையாளர் அவர்களால் விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டணத்தை சங்கரன்கோவில் கூட்டுக்குடிநீர் திட்டம் பணி முடிவடையும் வரை பழைய கட்டணத்தை வசூல் செய்ய நகராட்சி நிர்வாக ஆணையாளர் அவர்களது அனுமதியை எதிர்நோக்கி புதிய கட்டணத்தினை ஒத்திவைக்கலாம். இதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–
மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3257/2019/இ2

**பொருள்–333**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு வாகனம் TN 67 T1593, T1594 டிராக்டருக்கு வருடாந்திர பராமரிப்பு பணி மேற்கொள்ள **18.07.2019**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ் கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1. வெங்கஷ் ஆட்டோ மொபைல்ஸ் சிவகாசி – ரூ. 54150/–
2. நாகேந்திரன் ஆட்டோமொபைல்ஸ் சிவகாசி – ரூ. 53200/–

மேற்கண்ட ஒப்பந்தபுள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த எம்/எஸ். நாகேந்திரன் ஆட்டோ மொபைல்ஸ் சிவகாசி என்ற நிறுவனம் மூலம் பணி செய்ய மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு–

மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்ரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1247/2019/எச்1)

**பொருள்–334**

திருத்தங்கல் நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2018-19 (SBM 2018-19) திட்டத்தின் கீழ் 22 எண்ணிக்கை சேமிப்பு மின்கலத்தின் மூலம் இயங்கும் வாகனம் ( Battery operator Vehicle ) கொள்முதல் செய்யும் பணிக்கு 15.07.2019 அன்று வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | வேலையின் விபரம் | மதிப்பீட்டு தொகை (இலட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திருவாளர்கள் | ஒப்பந்தப்புள்ளி விபரம் (%குறைவு ரூ. % கூடுதல்) |
|---|---|---|---|---|
| 1 | **திருத்தங்கல் நகராட்சி**<br>திருத்தங்கல் நகராட்சிக்கு பேட்டரியால் இயங்கக்கூடிய வாகனம் 22 எண்ணம் வாங்கும் பணி | 39.60 | M/s. SJS & Co விருதுநகர் | 0.39 % குறைவு |
| | | | Priyam Industries and Engineering works சென்னை | 0.27 % குறைவு |

மேற்படி பணிக்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.39% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் M/s. SJS & Co விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும்.

**<u>அலுவலவக்குறிப்பு:-</u>**
இந்நகராட்சி பகுதியில் தூய்மை இந்தியா திட்டம் 2018-19 (SBM 2018-19) ஆண்டிற்கு வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளியில் மதிப்பீட்டை விட 0.39% குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர் M/s. SJS & Co விருதுநகர் அவர்களின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் பரிசீலித்து அனுமதிக்கலாம்.
ந.க.எண் : 1570/இ1/2018)

**பொருள்–335**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தேவையான ஈ மருந்தான லெமன் கிராஸ் ஆயில் வாங்க **23.07.2019**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1. M/S. ஸ்ரீ பிளாஸ்டோ டெக், சென்னை – ரூ, **3500**/– லிட்டர்
2. M/S. ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ் நாமக்கல் – ரூ. **3200**/– லிட்டர்

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S.ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ் நாமக்கல் என்ற நிறுவனம் மூலம் வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண். 1421/2019/எச்1)**

பொருள்–336

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு தேவையான மைக்ரோ பேக்டீசைடு (Micro Bacjtiside)மருந்து சப்ளை செய்ய **23.07.2019**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

1. M/S. ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ் நாமக்கல் – ரூ. **2990**/– kgs
2. M/S. ஸ்ரீ பிளாஸ்டோ டெக், சென்னை – ரூ, **3000**/– kgs

மேற்கண்ட ஒப்பந்தப்புள்ளியில் மிக குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த M/S.ஸ்ரீ அம்மன் டிரேடர்ஸ் நாமக்கல் என்ற நிறுவனம் மூலம் வாங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு–

மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று விநியோக உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.1421.2019.எச்1)**

**பொருள்–337**

திருத்தங்கல் நகராட்சி சொந்தமான புதிய பேருந்து நிலையத்திலுள்ள வணிக கட்டிடங்கள் 7 எண்ணம் பேருந்து நுழைவு கட்டணம் உரிமம் மற்றும் இரு சக்கர வாகன காப்பகம் உரிமம் ஆகிய குத்தகை இனங்களுக்கு **30.07.2019** அன்று ஏலம் குறித்த விபர அறிவிக்கையை தினசூரியன்

நாளிதழில் புரசுரம் (விளம்பரம்) செய்யப்பட்டமைக்கு ( நாள்.19.07.2019) அதற்கான தொகை மேற்படி நாளிதழுக்கு ரூ. 14784/—ஐ வழங்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு—**

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.2209/2015/அ1)

**பொருள்—338**

இந்நகராட்சியில் நிரந்தர துப்புரவுப் பணியாளர்கள் குறைந்த எண்ணமே உள்ளதால் SKMS அக்ஷயா மகளிர் மன்றம் ( 17 நபர்கள்) புன்னகை மகளிர் மன்றம் (17 நபர்கள்) மூலம் துப்புரவு பணிகள் நடைப்பெற்று வருகிறது. அவர்களது பணி காலம் 31.07.2019 உடன் முடிவடைய உள்ளது. தற்சமயம் 153 துப்புரவுப்பணியாளர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்க 01.08.2019ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. எனவே ஒப்பந்தப்புள்ளி பெற்று வேலை உத்தரவு வழங்கும் வரை இரண்டு மாத காலம் அதாவது செப்டம்பர்—19 வரை நீட்டிப்பு செய்யவும் அதற்கான உத்தேச செலவினம் ரூ. 9.00 லட்சத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு—

பொது சுகாதார அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். /2019/எச்1)

**பொருள்—339**

திருத்தங்கல் நகராட்சி வார்டு எண்.18 சுக்கிரவார்பட்டி ரோடு பகுதியில் ஆயிரத்திற்கு மேற்பட்ட குடியிருப்புகள் உள்ளன. மேலும் அப்பகுதியானது விரிவாக்கப் பகுதியாகவும் இருந்து வருகிறது. மேற்காண் பகுதியில் அதிகரித்து வரும் மக்கள் தொகைக் கேற்ப சீரான அளவில் குடிநீர் விநியோகம் செய்வதில் பாதிப்புகள் ஏற்படுகின்றது. எனவே சுக்கிரவார்பட்டி செல்லும் சாலையில் உருண்டைப் பாறை அருகில் திருத்தங்கல் நகராட்சிக்கு சொந்தமான ஆழ்துளை கிணற்றில் இருந்து கூடுதலாக குடிநீர் விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ.3,50,000/- (ரூபாய் மூன்று இலத்தி ஐம்பதாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

( ந.க.எண். /2019/இ1)

தனிஅலுவலர்

திருத்தங்கல் நகராட்சி